மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அரசு எடுக்கிற விழாக்களுக்கு, தொலைக்காட்சி நிலையத்தினரையும், வானொலி நிலையத்தினரையும், நேரடி அஞ்சல் செய்வதற்கான முறைகளுக்காக அழைப்பு அனுப்புவோம். அவர்கள் வந்து அந்தப் பணியைச் செய்வார்கள். ஆகவே, இந்த விழாவை எடுக்கிறபோதும் அந்த ஏற்பாடுகள் முறையாகச் செய்யப்படும்.

திரு. கோவைத் தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பெரியார்களுக்கு விழா எடுப்பதைப்போல, 1965-ல் தாய் மொழி நம் தமிழ் மொழிதான் என்று போராட்டத்தில் ஈடுபட்டு, வெங் காடுமைச் சாக்காட்டில், வெந்தணலில் வீழ்ந்து, சிறகொடிந்த பறவைகள் போல் தங்கள் இன்னுயிரை ஈந்த, தமிழ் இளைஞர்களுக்கு, அவர்களின் நினைவாக, ஜனவரி 25 ஆம் தேதியை தமிழக அரசு வீர வணக்க நாளாக பிரகடனம் செய்வது குறித்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்குத் தனியாகக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளில் நடத்தப்படும் நீதிபோதனை வகுப்புகள்.

*வினா எண் 126—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப் பள்ளிகளில் நீதிபோதனை (Moral Instruction) வகுப்புகள் நடத்தப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆம்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளில் நீதி போதனை வகுப்புகள் மீண்டும் தொடங்கப்பட இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதை வரும் கல்வி ஆண்டிலேயே அமுலுக்குக் கொண்டு வர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அது அமுலில் இருக்கிறது.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் நீதி போதனை வகுப்புகள் அமுலில் இருப்பதாகச் சொன்னார்கள். அதற்காக நன்றி. ஆனால் 3 மாதங்களுக்கு முன்னால் நாளேடுகளில் வந்த செய்தியின்படி மீண்டும் அந்த மாரல் இன்ஸ்டிரக்ஷன் செக்ஷனை உயர்நிலைப் பள்ளிகளில் துவக்க இருப்ப

தாகச் செய்தி வந்திருக்கிறதே. அதைப் படித்துத்தான் நான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். ஆனால் அமைச்சர் அவர்கள் அமுலில் இருப்பதாக சொல்கிறார். இருந்தால் சரி. ஆனால் என்னுடைய ஐயம் என்னவென்றால் இருந்தும் சரியாக நடை முறையில் செயல்படவில்லையா அல்லது செயல்படவே இல்லை என்றால் மீண்டும் தொடங்க அரசு முயற்சி எடுக்குமா என்பது தான்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: என்னிடத்தில் தரப் பட்டிருக்கிற விவரத்தின்படி இப்போது இருக்கிறது. ஆனால், ஒழுக்கக் கல்வி, மற்றும் சமுதாயக் கல்வி இவற்றை நம் பள்ளிக் கூடங்களில் உள்ள வகுப்புகளில் பயன்படுத்தக்கூடிய திட்டமாக பாட திட்டம் ஒன்றை வகுப்பதற்காக ஒரு குழுவை அரசு அமைத் திருக்கிறது. அதன் அறிக்கை கிடைத்ததற்குப் பிறகு இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய ஒழுக்கக் கல்வி பாடத் திட்டங்களை மாற்றியமைத்து இன்னும் சிறந்த முறையில் நடத்தப்படும்.

திரு. ஏ. சி. சண்முகம்: இளம் வயது மாணவர்கள் மனதை பக்குவப்படுத்தத்தான் உயர்நிலைப் பள்ளிகளில் நீதி போதனை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. நீதி போதனை மனதைப் பக்கு வப்படுத்துவதற்கு மிக முக்கியமான ஒன்றாக இருப்பது யோகா சனம். யோகாசனப் பயிற்சியையும் உயர்நிலைப் பள்ளிகளில் துவக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: யோகாசனப் பயிற் சியை பள்ளிகளில் தருவதற்கு எந்தவிதமான தடையையும் அரசு விதிக்கவில்லை.

திரு. இல. பலராமன்: நீதி போதனை என்று சொல்லும் போது எந்த முறையில் தரப்படுகிறது? அதாவது மதச் சார்புள்ள நீதி போதனையா அல்லது வேறு எந்த முறையில் நீதிபோதனை இன்று போதிக்கப்படுகிறது அல்லது அரசு போதிக்கக் கூறி யிருக்கிறது? இதற்காக தேர்வு வைத்து அந்த மதிப்பெண்ணை யும் தேர்வு எண்ணோடு சேர்த்து மதிப்பெண் இடப்படுகிறதா? அல்லது அதற்கான ஆலோசனையை வழங்க இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஒவ்வொருவரும் ஒழுங்காக இருக்க வேண்டும், ஒழுக்கத்தோடு இருக்க வேண்டும் என்பது எல்லோரும் விரும்புகிற ஒன்று. அதற்காக ஏற்படுத்தப் பட்டதுதான் மதங்கள். அவர்கள் அதை வளர்ப்பதற்கு பாடு பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதில் எந்தளவிற்கு வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் அல்லது மதத்தைப் பின்பற்றி எந்தளவிற்கு ஒழுங்காக நடந்துக் கொண்டிருக்கிறார்கள் என் பதை நாம் தெரிந்து கொள்கிற அளவிற்கு அதைப் புரிந்துக் கொள்ளலாம். இன்னொரு முறையிலும் அதை வெளிப்படுத்த விரும்புகிறோம். சமுதாயக் கடமை, சமுதாயப் பொறுப்பு என்ற வகையில் ஒவ்வொருவருக்கும் அதை உணர்த்தி அந்த

அடிப்படையில் நாம் ஒழுக்கமாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும் என்ற ஒரு முற்போக்கான கருத்தையும் அந்த அடிப்படையிலும் மாணவர்களுக்கு ஒழுங்கைச் சொல்லித் தருவதற்கு முயற்சியை மேற் கொண்டிருக்கிறார்கள். நீதி போதனை, ஒழுக்கக் கல்வி என்பதோடு சமுதாயக் கல்வியையும் தர வேண்டும் என்ற கருத்தையும் வலியுறுத்தத்தான் புதிதாக ஒரு குழு போடப்பட்டிருக்கிறது. இன்று மத்திய கல்வி அமைச்சரின் கல்வி ஆலோசகரான திரு. ஜோஷி அவர்கள் தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த விவரங்களை நாம் சொல்லியிருக்கிறோம். அதற்காக நாம் மதத்தை கூடாது என்று சொல்லவில்லை. அதைப் பற்றி நாம் தவறாக ஒன்றும் சொல்லவில்லை. அவர்கள் ஒரு பக்கம் முயற்சி செய்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது இந்தக் கருத்தையும் ஒரு பக்கம் சொல்லி சமுதாய நோக்கில் மாணவர்களை வளர்க்க விரும்புகிறோம். மதக் கருத்துக்கள், ஒழுங்காக இருக்க வேண்டும் என்பதற்காக அதைப் பயன்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கு உரிமை இருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : அண்மைக் காலத்தில் மாணவர்கள் மத்தியில் ஒழுங்கீனம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இலங்கை மலேஷியா போன்ற நாடுகளில் ஒழுக்க போதனையைக் கட்டாய பாடமாக வைத்திருக்கிறார்கள். அதேபோல் இங்கும் உயர்நிலைப் பள்ளிகளில் அதைக் கட்டாய பாடமாக வைத்து அதில் தேர்வு எழுதச் செய்வதற்குண்டான அறிவிப்பை அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒழுக்கப் போதனை இப்போது கட்டாய பாடந்தான். அதை ஒரு பீரியேட் சொல்லித் தர வேண்டும். மாணவர்கள் அதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற முறையில் இருந்து வருகிறது. பரீட்சைக்கு அதை வைத்துக் கொள்ளவில்லை. பரீட்சைக்குரிய பாடமாக அதை ஆக்கவும் நாம் விரும்பவில்லை. ஒழுக்கம் பற்றி நல்ல முறையில் உணரத்தக்க வகையில் சொல்லித் தந்து இயல்பாகவே ஒழுக்கத்தோடு நடந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபடுகிறோம்.

முசிறியில் முன்சீப் நீதி மன்றம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 127—திரு. எம்.கே. ராஜமாணிக்கம் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் முசிறி தாலுகா, முசிறியில் முன்சீப் கோர்ட் அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் என்றால் எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம், (ஆ) திருச்சி மாவட்டம் முசிறி தாலுக்காவில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைக்கும் திட்டம் நிதிநிலைக்கேற்ப 1982–83 ஆம் ஆண்டு எடுத்துக் கொள்ளப்படும்.